வாரஇதழ்

# இது நம்தேசம்

' Registered in the department of posts of srilanka under No QD/173/news/2014 '

பார்வை 03 | வள்ளுவர் ஆண்டு 2052 | மே 17 - 24, 2021 | பக்கங்கள் - 05

Web - www.ithunamthesam.com
mail - ithunamthesam@gmail.com



## முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 12ம் ஆண்டு நினைவில்...

# அரசின் தடைகளை மீறி தாயகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

## முள்ளிவாய்க்காலிலும் தீபங்கள் ஒளிர்ந்தது!









முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 12ஆம் நினைவேந்தல்கள் தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களால் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களின் கடும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட தமது மக்களை நினைவுகூர்ந்தனர்.

>பக்கம்02

## கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் 91 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

### ஆதரவாக 149 – எதிராக 58

நாட்டின் கவனத்தை ஈர்த்ததும் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டது மான கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் மீதான மூன்றாவது வாசிப்பு பாராளு மன்றத்தில் 97 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. நிலையிலேயே 91 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு முன்னர் குறித்த சட்டமூலம் மீதான விவாதம் முடிவடைந்த பின்னர் இரண்டாவதுவாசிப்பு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 148 வாக்குகளும், எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன் பின்னர் இடம்பெற்ற குழு நிலையில் அரசாங்கத்தினால் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டதுடன், எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுக்கு ஆளும்கட்சி இணங்கவில்லை. இதனால் மூன்று சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுக்கு

>பக்கம்05

## இனப்படுகொலையை கைவிட்ட கூட்டமைப்பு மற்றும் விக்கி அணி!

### 60,000ற்கும் குறைவான தமிழ் மக்களே கொல்லப்பட்டனர் என ஐ.நாவிற்கும் கடிதம்!

கடந்த வாரத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் இனப்படுகொலையால் கொல்லப்பட்ட மக்களின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த இனப்படுகொலை நினைவுத்தூபி உடைக்கப்பட்டதையும், அங்கு நடுகை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்டு வைக்கப்பட்டிருந்த இனப்படுகொலை பிரகடன நடுகல் இரவோடு இரவாக தூக்கிச் செல்லப்பட்டு காணமலாக்கப்பட்ட சம்பவத்தையும் ஐ.நாவிற்கு ஆவணப்படுத்துகிறோம் என்ற போர்வையில் இலங்கையில் தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலையில்லை என்ற விடயத்தை மறைத்து மக்கள் போரினாலேயே இறந்தார்கள் எனவும், அதுவும் 60,000க்கும் குறைவான தமிழர்களே இறந்தார்கள் எனவும் குறிப்பிட்டு மீண்டும் ஒரு தடவை இனப்படுகொலை என்ற விடயத்தை சூட்சுமமாக கைவிட்டு ஐ.நாவிற்கு கூட்டமைப்பினர் மற்றும் விக்கி அணி இணைந்து கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். இனப்படுகொலை என்ற விடயம் இல்லாததாலும், முள்ளிவாய்க்காலில் 146,000ற்கும் அதிகமான

>பக்கம்05

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பேச்சு

### அமைச்சர் தினேசை தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்தனர்



தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவை சந்தித்து தமிழ் அரசியல்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடினர். இந்த சந்திப்பு பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அரசியல் கைதிகள் பற்றிய விபரங்களைதமிழ் தரப்பினர் அமைச்சரிடம் ஒப்படைத்தனர். அதன்படி, விசாரணைமுடியாத கைதிகள், தண்டனை வழங்கப்பட்ட கைதிகள் எனஅரசியல் கைதிகள் குறித்த முழுமையான

>பக்கம்05

## தமிழர்களை அழிக்கத் துணிந்தவர்கள் சீனாவிற்குத் தாரை வார்க்கிறார்கள்

### துறைமுக நகர சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்றில் கஜேந்திரகுமார்



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமான அமைதிப் பேச்சுவார்த்தை உச்சநிலையில் இருந்தபோது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நிலப்பரப்பை அதன் கட்டுபாட்டுக்குள் வைத்திருந்தபோது, மேற்கொண்டு பேச்சுவார்த்தையை தொடரும் வகையில் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிய யோசனை முன்வகைக்கப்பட்டது. ஆனால் உங்கள் இனவாத மனோநிலையில் அதனை நிராகரித்தீர்கள். அதை ஒரு இடைக்கால ஏற்பாடாக கூட நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தயாராற்று அதை நிராகரித்திருந்தீர்கள். தமிழ் மக்கள் ஏதோ ஒருவகையில் ஒரு சிறிதளவேனும் தன்னாட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்வதனை தடுப்பதற்காக எம்மை அழிக்ககூட துணிந்தீர்கள். அதற்காக எமது மக்கள் மீது இனப்படுகொலையை அரங்கேற்றீனீர்கள். இவ்வாறு நாடாளுமன்றத்தில் துறைமுகநகர சட்டமூலம் தொடர்பிலான விவாதத்தில் 2021-05-20 அன்று கலந்து கொண்டு தமிழர் தரப்புக் குரலாக உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவரது முழுமையான உரையின் தமிழாக்கம் :

இங்கே இருக்கின்ற பெரும்பாலான எதிர்கட்சி உறுப்பினர்கள் இச்சட்டமூலத்தை அணுகியதை போலன்றி, நாம் பிறிதொரு கோணத்திலேயே இதனை பார்க்க விரும்புகின்றோம்.

ஒரு சிறியநாடாகவுள்ள இலங்கை சூவதேச அளவிலான பொருண்மியப் போட்டிகளை வினைத்திறனுடன் எதிர்கொள்ள வேண்டுமேயானால் புதிய செயற்திறனுள்ள வழிமுறைகளைக் கண்டறிவதுபற்றிச் சிந்திக்க வேண்டிள்ளது என்பது புரிந்து கொள்ளக்கூடியது. குறிப்பாக, கொரோணா பெருந்தொற்று காரணமாக உலகளவில் பொருண்மிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறநிலையில், பொருளாதாஉத்தை

>பக்கம்02

## தமிழர்களை அழிக்கத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினைத்திறனுடன் தக்கவைத்துகொள்வதற்கு இலங்கை அதிகளவில் செயற்பட வேண்டியுள்ளது என்பதும் புரிந்து கொள்ளக் கூடியதே. அந்தவகையில் பார்க்கிறபோது, உண்மையில் நியாயமான நோக்கங்களுக்காக சிறப்பு பொருண்மிய வலயங்களை அல்லது வேறெந்த பெயரில் அழைக்கப்பட்டாலும் அத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதுபற்றிச் சிந்திப்பது தவறானதல்ல. அல்லது இத்தகைய புதிய அணுகுமுறைகளை கையாள்வதற்கும், அதற்கான செயற்படு வெளியினை உருவாக்குவதற்கும், அரசியலமைப்பில் கூட மாற்றங்களைக் கொண்டு வருவதனையோ அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டிய சட்ட மூலங்களைக் கொண்டுவருவதனையோ, ஏன், ஒப்பங்கோடல் முறையிலான பொது வாக்கெடுப்புக்குச் செல்வதனையோ நாம் தவறெனக் கூறமுடியாது. ஏனெனில், உண்மையில் இந்த தீவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பானது எழுபத்திமூன்று வருடங்கள் பழமையானது. அந்த அரசியலமைப்பில்க்கூட இதுவரை நீங்கள் 20 தடவைகள் திருத்தத்தங்களைச் செய்துள்ளீர்கள். ஆனால், நடைமுறையில் இன்னமும் பிரச்சனை அதிகரித்துத்தான் செல்கிறது. நாட்டிற்குள் பிளவுகள் அதிகரித்தவண்ணம்தான் இருக்கின்றன. இனங்களுக்கிடையில் பிளவுகள் அதிகரித்து எதிரெதிர் துருவ நிலைக்கு செல்கின்றன.

உண்மையில் இந்த அரசியலமைப்பானது, செயற்பாட்டுக்கு உதவாத, ஒரு செயலலிழந்த அரசிலமைப்பாக மாறிவிட்டது. வெறுமனே உணர்ச்சிகளின் அடிப்படையிலே அல்லது இனவாதத்தின் அடிப்படையிலேயே இந்த அரசியலமைப்பை நீங்கள் இன்னமும் தக்கவைத்துக் கொண்டிருக்கிறீர்கள். தவிர உண்மையில் இது ஒரு செயலிழந்த பயனற்ற அரசியலமைப்பாகும். இப்படியான ஒரு உணர்ச்சிமைய அரசியலமைப்பு மூலம் அதிகாரத்தை மத்தியில் குவித்து வைப்பதில் எதுவித அர்த்தமுமில்லை. அந்த வாதத்தின் அடிப்படையில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை நேரடியாக ஊக்குவிக்கும் வகையில், புதிய தனி அலகாக துறைமுக நகரத்தை உருவாக்குவது, தொழில் வாய்ப்புகள்– தொழிற்பயிற்சிகளை பெற்றுக்கொள்ளும் வகையில் பொருண்மிய மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்கு அதனை பரிசீலிப்பது போன்றவை, தவறான அணுகுமுறை எனக் கூறமுடியாது.

இவ்விடயங்களில் நாட்டின் ஏனைய பகுதிகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ள நிலையில் அதன் அவசியத்தை உணரக்கூடியதாக இருக்கிறது. ஆனாலும், நாங்கள் இத் துறைமுக சட்டமூலத்தை எதிர்க்கிறோம். பொருண்மிய மேம்பாட்டை ஏற்படுத்துவதுதான் இங்கு முதன்மையான நோக்கமாக இருப்பின், அந்தக் குறிக்கோளில் எதுவித தவறும் இல்லை. உண்மையில் அப்படி இருப்பின் அதை நாம் எதிர்க்கவும் தேவையில்லை.

ஆனால், நாம் இந்த சட்டமூலத்தை எதிஉடப்பதற்கான காரணம் வேறு. இந்த ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையானது, செயலிழந்து போன – குறிப்பாக, இந்த நவீன காலத்தில் காலாவதியான ஒரு கோட்பாடு என்பதை எமது அரசியல் கட்சி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. நாட்டின் 'இறைமை 'என அரசாங்கமும், ஏன் – எதிர்க்கட்சியும் வரையறுக்கின்ற விடயத்தையும் நாம் ஏற்கவில்லை. துரதிர்ஷ்டவசமாக பிரதான எதிர்கட்சி கூட ' இறைமை' என நீங்கள் வரையறுக்கின்ற விடயத்தில் அரசாங்கத்தையே விஞ்சுகிறபடி பேசிவருகிறது. இறைமை எனும் பெயரில் நீங்கள் கட்டிப்பிடித்துக்கொண்டிருப்பது உண்மையில் காலாவதியாகிவிட்ட ஒரு கருதுகோள். உலகபொருளாதார விடயத்தில் ஒரு தரப்பாக இருக்க விரும்பும் நீங்கள், உள்நாட்டில் இவ்வாறு நடந்துகொள்ளமுடியாது. இவ்விடயம் தொடர்பாக புதிதாகச் சிந்திக்க வேண்டும். இவ்வரசியல் யாப்பு தொடர்பாக புதிதாகச்சிந்திக்க வேண்டும். இந்த நவீன யுகத்திற்கு ஏற்றவிதத்தில் அரசியலமைப்பில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த எத்தனிப்பதனை நாங்கள் வரவேற்போம். இச்சட்டமூலம் கொண்டுவருவது தொடஉபாக அரசாங்கம் உத்தியோகபூர்வமான முறையில் வெளிப்படையாக குறிப்பிடுகின்ற நோக்கங்களுக்காக நாங்கள் இச்சட்டமூலத்தை எதிர்க்கவில்லை என்பதனை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

நாம் இதனை எதிர்ப்பது வேறு ஒரு கோணத்திலேயே. உண்மை என்னவென்றால், இன்றைய உலகில், எவரும் எதனையும் தமக்கு இலாபமின்றி செய்வது கிடையாது . இது தான் யதார்த்தம். முன்னைய மகிந்த இராஜபக்சவின் அரசாங்கத்தினைப்போலவே இந்த அரசாங்கமும், நீண்டகாலமாக இங்கே நிலவிவரும் புவிசார் அரசியல் சமநிலையை சவாலுக்குட்படுத்தி குழப்புவதை தமது தெரிவாக கொண்டிருக்கும் முக்கிய தரப்பாக இந்த நாட்டில் இருந்துவருகிறது. மகிந்த இராஜபக்ச அரசாங்கம் போலவே இன்றைய கோத்தாபாய இராஜபக்ச அரசாங்கமும் மிக வெளிபடையாகவே சீனாவின் பக்கம் சாய்ந்ததாகவே செயற்பட்டுவருகிறது.

உண்மையில் இந்த நாட்டின் பொருண்மியத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நியாயமான நல்ல திட்டங்களைக் கூட, சீனாவின் தேவைகளுக்காகவும் சீனாவை திருதிப்படுத்துவதற்காவும், இந்த நாட்டின் அமைவிடம் காரணமாக கிடைத்த புவிசார் அரசியல் முக்கியத்துவத்தை கூட சீனாவுக்கு விட்டுக்கொடுக்கின்ற அளவுக்கு, இந்த அரசு மிக வெளிப்படையான சீன சார்பு நிலையை எடுத்து இருக்கிறது. அதைத்தான் நாம் இங்கு கேள்விக்குட்படுத்த விளைகிறோம். ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சிக்காலத்திலும் ஒரு புவிசார் அரசியல் (அமெரிக்க எதிர் சோவியத்) போட்டியொன்று நிலவியிருந்தது. அதன்போது, ஜே ஆர் ஜெயவர்த்ன அமெரிக்க சார்பு நிலைப்பாடு எடுத்திருந்தார். அந்த நேரத்தில் நிலவிய பூகோள அரசியல் போட்டியில், சிறிலங்கா மென்மேலும் இந்தியாவுக்கு மாறாக அமெரிக்க சார்பு நிலைக்கு செல்லாது தடுப்பதற்கான ஒரு உத்தியாக, எமது அண்டை சக்தியானஇந்தியா (சோவியத் சார்பு), தமக்கான பிடிமானமாக, தமிழர்களது ஆயுத போராட்டத்தையும் ஆதரித்திருந்தது. அதுதான் உண்மையில் அப்போதைய யதார்த்தம். அப்போதைய பனிப்போர் காலத்தில், இலங்கையானது அமெரிக்க சார்பாக சென்றுவிடாமல் தடுப்பதற்கு இந்த பிராந்திய வல்லரசானது வாய்ப்பை தேடிக்கொண்டிருந்தது. அதனால் தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டத்தை இந்தியா தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தியது. இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான கருவியாக ஆயுதப் போராட்டத்தை பயன்படுத்தியது. அதுவே உண்மை நிலவரம். அதேபோல, இன்று இப்பிராந்தியத்தில் காணப்படும் வலுச்சமநிலையை சவாலுக்குட்படுத்தி தன்பக்கத்திற்கு திருப்ப முயலும் ஒரு தரப்பை, இந்தப் பிராந்திய வல்லரசின் மேலாதிக்கத்தை கேள்விக்குட்படுத்தும், அந்த வல்லரசுத்தரப்பை இந்த நாட்டிற்குள் கொண்டுவந்திருக்கிறீர்கள். அதை தான் நாம் எதிர்க்கிறோம். உண்மையில் புவிசார் அரசியலை மையப்படுத்தி நீங்கள் ஆடிவருகின்ற நடவடிக்கைகளால் இந்த தீவில் வேறு எவரையும் விட, தமிழர் தேசமே அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. எமது தேசம் மீண்டும் மீண்டும் இப்படியான ஒரு பாதிப்பை எதிர்கொள்வதை நாம் விரும்பவில்லை. அதனால் தான் எமது அரசியல் கட்சி இந்த சட்டமூலத்தை எதிர்க்கிறது.

இன்னுமொரு முக்கியமான துரதிஷ்டவசமான ஒரு விடயத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அது தான் இனவாதம். அது தான் வகுப்புவாதம். அது தான் ஒரு துரதிர்ஷ்டவசமாக, இந்த அவையிலுள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் இதனையே விரும்புகிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமான அமைதிப் பேச்சுவார்த்தை உச்சநிலையில் இருந்தபோது, விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு நிலப்பரப்பை அதன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தபோது, மேற்கொண்ட பேச்சுவார்த்தையை தொடரும் வகையில் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிய யோசனை முன்வகைக்கப்பட்டது. அப்போதைய அரசாங்கம் சமஷ்டி முறையைக் கொண்டுவருவது பற்றிச் சிந்திப்பதாக உத்தியோகபூர்வமான முறையில் அறிவித்திருந்தது. இத்தகைய புறச்சூழலிற்தான் விடுதலைப்புலிகள் இவ் ஆலோசனையினை முன்வைத்திருந்தனர். ஆனால், அதனை நீங்கள் நிராகரித்திருந்தீர்கள். அதை ஒரு இடைக்கால ஏற்பாடாக கூட நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராற்று அதை நிராகரித்திருந்தீர்கள். தமிழ் மக்கள் ஏதோ ஒருவகையில் ஒரு சிறிதளவேனும் தன்னாட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்வதனை தடுப்பதற்கு எம்மை அழிக்கக்கூடத் துணிந்தீர்கள். அதற்கு எம்மினத்தின் மீது இனவழிப்புச் செய்வதனை உங்கள் தெரிவாக எடுத்தீர்கள் . ஆனால், இன்றைக்கு வேறு தேவைகளுக்காக அதுபோன்ற ஒரு அலகினை உருவாக்குவது தொடர்பில் உங்களிடம் எதுவித வெட்கமோ தயக்கமோ காணப்படவில்லை.

புவிசார் அரசியலில் போட்டித்தரப்புகளில் ஒரு தரப்பினர் மேலாதிக்கம் பெறுவதற்கு வழிவகை செய்யும்வகையில் இதனை மேற்கொள்கிறீர்கள். (அன்று தமிழர்கள் தன்னாட்சி அதிகாரம் பெற்றுவிடக்கூடாது என்பதற்காக எதிர்த்த நீங்கள், இன்று வேறு வல்லரசு சக்திகளின் தேவைகளுக்காக இதை ஆதரிக்கிறீர்கள்.) இதுதான் இந்த அவையின் இனவாதம். இதன்காரணமாகவே நாங்கள்இந்தச் சட்டமூலத்தை எதிர்க்கிறோம்.

இன்று இங்கே நிகழ்ந்துகொண்டிருக்கும் இந்த முரண்நிலையை இந்த அவலமான நிலைமையை சிங்கள மக்கள் உணர்ந்துகொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கிறோம்.

# கொரோனா மரணம் உச்சத்தில் ஒரே நாளில் 46 பேரை பலியெடுத்தது

## மொத்த இறப்புகள் 1,178 ஆகியது

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 46 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த உயிரிழப்புகள், கொரோனா மரணப் பட்டியலில் நேற்றுப் பதிவாகியுள்ளன என்று அரசதகவல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே 16ஆம் திகதி 4 பேரும், மே 17 திகதி 4 பேரும், மே 18 ஆம் திகதி 3 பேரும், மே 19ஆம் திகதி 8 பேரும், மே 20ஆம் திகதி 15 பேரும், மே 21ஆம் திகதி 10 பேரும், மே 22ஆம் தீகதி 2 பேரும் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு மரணமடைந்த 46 பேரில் 30 பேர் ஆண்கள், 16 பேர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை1,178 ஆக உயர்வடைந்துள்ளது. கடந்த ஒரு மாதக் காலப்பகுதியில் மாத்திரம் 60 இற்கும் மேற்பட்டோர் கொரோனாத் தொற் றால் உயிரிழந்துள்ளனர்

இவர்களில் அதிகமானவர்கள் வைரஸ் தொற்றால் ஏற்படும் நீமோனியா நிலைக்குச் சென்றே மரணித்துள்ளனர். எதிர்வரும் யூன் மாதத்தில் இருந்து கொரோனா மரணங்கள் நாளொன்றிற்கு 200ஆக அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# யாழில் இராணுவத்தினரால் 120 கிலோ கஞ்சா மீட்பு



யாழ் தொண்டைமானாறு பகுதியில் கடத்துவரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 120கிலோ கஞ்சா இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது. இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் நடைபெற்ற சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றின் போது கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. ஆனால் சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. பின்னர் கைப்பற்றப்பட்ட கஞ்சா நீதிமன்றின் உத்தரவுக்கமைய தீவைத்து அழிக்கப்பட்டது. அண்மைக்காலமாக யாழில் போதைப்பொருட்கள் கைப்பற்றப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# மானுட நீதிக்காக குரல் ஓயாது ஒலிக்கும் சகோதர இன குரல் ஊடகவியலாளர் பாஷன அபேவர்தன , தமிழர்கள் மீது இழைக்கப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு குறித்து வெளியிட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அறிக்கை



Remembering Mullivaikkal – 2021 May 18

As a member of the Sinhala nation, for me, this is a moment of shame, a moment of guilt and a moment of pride. The shame and the guilt are connected to my inability to deny and brush off my individual responsibility, just like many of my comrades, to prevent the monstrous atrocities committed against the Tamil nation. The pride is owning the trust of the surviving members of the Tamil nation to the extent of being invited to remember and commemorate those who died in Mullivaikkal.

Fifteen minutes after 12 years, to revisit and reflect upon the genocidal onslaught in Mullivaikkal is what is expected from me. Nearly four hundred thousand traumatised and starving population, who were deprived of medicine, deprived of food and sleep, cornered into a diminishing small patch of land and attacking them from the sea, air and land is what marks the 'inglorious Victory Day' of the Sri Lankan state, which is being celebrated on the streets of Colombo every year since 2009.

But it didn't stop there.

Summarily executing the survivors, raping women and making hundreds, if not thousands, to disappear, including children, before herding the rest into internment camps and so-called rehabilitation camps were the preliminary steps taken towards to build a "one country - one nation". What underlies this newly found 'One Country - One Nation' is piles and piles of skeletons of the generations whose will to freedom and equality was crushed with the military might of an ethnocratic genocidal state.

What do we call these monstrous crimes? How do we define these monumental atrocities committed through decades, which reached their culmination point in May 2009 in Mullivaikkal?

Is it ethnic cleansing? Is it war crimes? Is it crimes against humanity? or is it what he international criminal law calls as the crime of crimes, the GENOCIDE?

On one hand, the Sri Lankan state and their international backers seem to be believing that the Tamils want to call their plight as genocide because it offers them a certain privilege in the eyes of the rest of the world. But is that what it is about? Is Genocide a privilege, which surviving members of a nation desperately fighting to win?

On the other hand, there is also an opinion that Tamil nation shouldn't insist in calling the crime by its true name - which is Genocide - because the atrocities they were subjected to is not defined as such by international powers or those who decide what is genocide and what is not.

The fundamental flaw of this thinking is to overlook the basic fact that the crime of genocide is not a proposal that needs to be voted and endorsed unanimously by those who hold power. No consensus is needed among the powerful to accept and name the crime what the Tamil nation have been subjected to for decades, and what you are going through every day, every hour and every minute even 12 years after Mullivaikkal.

As the person who coined the term Genocide, the Polish scholar Raphael Lemkin said, "the genocide does not necessarily mean the immediate destruction of a nation, except when accomplished by mass killings of all members of a nation. It is intended rather to signify a coordinated plan of different actions aiming at the destruction of essential foundations of the life of national groups".

To establish the fact that there was a coordinated plan carried out with the intent to dismantle the essential foundations of the collective national life of the Tamil nation and to destroy them in whole or in part is not a special status the Tamil nation need to win from the powerful by impressing upon them.

Proving the crime of Genocide is a matter of investigating, examining, analysing and exposing the historical process, that in essence intended to destroy the national identity of the Tamils and to impose the national identity of the opprssor, the Sinhala Buddhist nation.

That is something I cannot analyse and elaborate on within the limited time allocated to me. But 12 years since the massacres in Mullivaikkal, the coordinated plan to destroy the essential foundations of the collective national life of the Tamil nation still remain to be investigated thoroughly and proven.

Every human being who died since the first half of the twentieth century until first half of the twenty first century for being a Tamil and for expressing their will to live as free men and women with dignity who would fight and die against the conditions of enslavement and oppression are waiting for the living to deliver them justice.

Naming the crime fearlessly, withstanding the pressures that come from the global powers, is the first step to win that justice.


Mullivaikkal is not a name of a place; it is a name of a crime.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இணையவழி கூட்டு நினைவேந்தல்

தமிழ்த் இனத்தின் மீது சிறிலங்கா அரசு திட்டமிட்டு மேற்கொண்ட இன படுகொலையின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை கொவிட்-19 பேரழிவு வைரஸ் பரவல் காரணமாக அனைத்து தமிழ் மக்களும் ஒன்றாகத் திரண்டு நினைவேந்த முடியாத நிலையில் வீடுகளில் இருந்து நினைவேந்துமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரியிருந்தது.

அதன் பிரகாரம் வீடுகளில் இருந்து தமிழின அழிப்பு நினைவேந்தலை மேற்கொண்டவாறு சூம் (ZOOM) இணைய செயலி ஊடாக இணைந்து கூட்டுப் பிரக்ஞையை வெளிப்படுத்தும் இந் நிகழ்வு இரண்டு மணி நேரங்களுக்கும் அதிகமாக இடம்பெற்றிருந்தது. இந்த நினைவேந்தல் நிகழ்வில்நூற்றுக்கும் மேற்பட்டோர் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டிருந்தனர்.

முற்பகல் 10.30 மணிக்கு அனைவரும் இணைந்து இனப்படுகொலைக்கு




உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களின் ஆத்ம சாந்திக்காக இரண்டு நிமிடம் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

முற்பகல் 10.32 மணிக்கு அனைவரும் தங்கள் வீடுகளில் இருந்தவாறு சமநேரத்தில் கூட்டாக சுடரேற்றி வணக்கம் செலுத்தும் நிகழ்வு ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன.

உரைகளைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இனவழிப்பு யுத்த காலத்தில் பட்டினிசாவுக்கு தள்ளப்பட்டிருந்த மக்கள் தமது உயிஉகளை காத்துக் கொள்வதற்காக அரிசிக் குறுணலை நீரில் அவித்து கஞ்சியாக உண்டு உயிரைக் காத்துக் கொண்ட அனுவபத்தை மீள நினைவு படுத்தும் முகமாக அனைவரும் கஞ்சியை பரிமாறிக் கொண்டார்கள்.

இணையவழி நிகழ்வில் இனவழிப்பினை நினைவு கூரும் வகையிலும், இனவழிப்புக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை வலியுறுத்தி அனைத்து தமிழ் சிவில் மற்றும் அரசியல் தரப்புக்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினை வலியுத்தும் உரைகளும் இடம்பெற்றிருந்தன.

1. கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் , தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்.



2. திரு,சு.ப.உதயகுமாரன், பச்சைத் தமிழகம் கட்சியின் சேவகர்.

3. திரு.பாசன அபயவர்த்தன, முன்னாள் கிரு பத்திரிகை ஆசிரியர், தற்போது ஜேர்மனியிலிருந்து ஜே.டி.எஸ் அமைப்பின் செயற்பாட்டாளராகவும் பணியாற்றி வருகிறார்.



4. Prof. JUDE LAAL - An Associate professor and the director of Trinity Center for Post-Conflict Justice, at the Trinity College Dublin, Ireland.



5. முனைவர் விஜய் அசோகன் தற்பொழுது ஸ்வீடன் நாட்டில் அறிவியல் ஆராய்ச்சியாளராக பணியாற்றி வருகிறார் ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் தமிழீழ மக்களின் தமிழ் கல்விக் கழகங்களில் ஆசிரியராகவும் தொடர்ந்து சேவை புரிந்து வருகிறார்.

6. திருமதி.கிருபா கிரிதரன், செயலாளர், மகளீர் அணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

7. செல்வராசா கஜேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர்.

ஆகியோர் உரையாற்றியிருந்தார்கள்.



## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளரிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணை




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளரான தவபாலனிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் .வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் எஸ் தவபாலன் பல்வேறு சமூக சேவைகள் மற்றும் தமிழர் நலன்சார்செயற்பாட்டில்ஈடுபட்டுவரும்நிலையில் அவர் சேவையாற்றும் கிராமத்தில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் .சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இவ் விசாரணைகளில் அவரது குடும்ப உறுப்பினர்களது விபரம், வெளிநாட்டு தொடர்புகள், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் ஏற்பாடுகள், பல்கலைக்கழகத்தில் செயற்பட்ட விதம் தொடர்பிலும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரித்துச் சென்றுள்ளனர். யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதியாக செயற்பட்ட காலத்தில் இனந்தெரியாதவர்களால் தவபாலன் தாக்கப்பட்டு காயங்களுக்கு உள்ளாகியிருந்தமையும், அதன் பின்னர் அரச படைகள், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களின் நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் பல இடங்களில் அரசின் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

## குறிசுட்டகுளத்தில் வாழ்வாதார உதவியாக கோழிக்கூடு வழங்கிவைக்கப்பட்டது







வவுனியா வடக்கு கனகராயன்குளம் குறிசுட்டகுளத்தில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு கோழிக்கூடு மற்றும் நாற்பது கோழிக்குஞ்சுகளை வாழ்வாதார உதவியாக வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டத்திற்கான நிதி உதவியினை வழங்கிய அவுஸ்ரேலியா உறவுகள் வழங்கியிருந்தார்கள். இச்செயற்றிட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் எஸ். தவபாலன் மற்றும் செயற்பாட்டாளர்கள் மிதுர்சன், நிதர்சன், சியாந்தன், யுதர்சன் ஆகியோர் பங்குபற்றியிருந்தார்கள்.

## யாழ் பல்கலையில் தீபத்தை உதைந்து வீழ்த்தி காவலாளி அட்டகாசம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுத்தூபியில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறாமல் தடுக்க பல்கலை வாசலில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்த நிலையிலும் நினைவேந்தல்நிகழ்வுகள்மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அவ்விடத்திற்கு வந்த யாழ் பல்கலைக்கழகத்தில் காவலாளியாக பணியாற்றும் ஒருவர் அங்கு உறவுகளுக்காக கொழுத்தி வைக்கப்பட்டிருந்த தீபங்களை காலால் உதைந்துவீழ்த்தி அட்டகாசம் புரிந்துள்ளார். முன்னர் இருந்த தூபி உடைக்கப்பட்டதால் புதிய தூபி பல்கலைக்கழக நிர்வாகத்தின் அனுமதியுடன் கட்டப்பட்டிருந்த நிலையிலும் ஏன் நினைவேந்தல்கள் தடுக்கப்படுகின்றது என மாணவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

## தமிழ் அரசியல் கைதிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபரத்தை கையளித்ததுடன், அவர்களை விடுவிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். இந்த நிலையில், இது குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடி முடிவை அறிவிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சாடபில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புசார்பில்செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், கோவிந்தம் கருணாகரம், வினோ நோகராதலிங்கம், சி.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், இரா. சாணக்கியன், த.கலையரசன் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். அதே நேரம், ஆகியோரும் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் மனோ கணேசன், வே.இராதகிருஷ்ணன் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். அதேபோல அரசாங்கத்தரப்பில் அமைச்சர் இனேஸ் குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அண்மையில் அனுப்பிய கடிதத்தை தொடர்ந்து இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இனப்படுகொலையை கைவிட்ட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் வெறுமனே 60,000க்கும் குறைவானோரே கொல்லப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டதால் அக்கடிதத்தில் கையெழுத்திட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்மற்றும்செல்வராசாகஜேந்திரன் ஆகியோர் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இனப்படுகொலை மாதத்தில், மக்கள் இனப்படுகொலையில் கொல்லப்பட்ட தங்கள் உறவுகளின் நினைவுத்துயரில் இருக்கும் போதே கூட்டமைப்பும், விக்கி அணியும் அம்மக்களை மேலும் வேதனைக்குள்ளாக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர் எனவும், இது இனப்படுகொலை குற்றச்சாட்டிலிருந்து அரசைக் காப்பாற்றும் ஒரு செயற்பாடு என்றும் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பு துறைமுக நகர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டன. இதன் பின்னர் நடத்தப்பட்ட மூன்றாவது வாசிப்பிலேயே கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் மீதானமூன்றாவது வாசிப்பு பாராளுமன்றத்தில் 91 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பில் பலதரப்புக்களினால் உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந் நிலையில் இச் சட்டமூலம் தொடர்பான தனது வியாக்கியானத்தை உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு அனுப்பி வைத்த நிலையில் அதனை சபாநாயகர் கடந்த 18 ஆம் திகதி சபைக்கு அறிவித்தார். உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தில் சட்டமூலத்தில் சில சரத்துக்களை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பும், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் நிரூபிக்கப்பட வேண்டுமென தெரிவித்திருந்தது. அத்துடன் திருத்தங்களையும் முன்வைத்திருந்தது. இந்நிலையில் உயர் நீதிமன்றத்தின் திருத்தங்களை ஏற்றுக்கொவதாக அறிவித்த அரசு திருத்தப்பட்ட மூலம் தொடர்பான விவாதத்தை கடந்த புதன் மற்றும் வியாழன் ஆகிய இரு தினங்களாக பாராளுமன்றத்தில் நடத்தியது. இவ்வாறான நிலையிலேயே விவாதத் தின் இறுதி நாளான நேற்று வியாழக்கிழமை அதனை நிறைவேற்ற அரசு முயன்றபோது எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.லக்ஷ்மன் கிரியெல்ல சட்டமூலம் தொடர்பில் வாக்கெடுப்பைக் கோராது தமது எதிர்ப்பை பதிவு செய்யுமாறு சபாநாயகரிடம் கோரினார். இதற்கிடையில் எழுந்த ஜே .வி.பி. எம்.பி விஜித ஹேரத் சட்டமூலத்தை நிறைவேற்ற வாக்கடுப்பைக் கோரினார். இதனையடுத்து இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் அரச தரப்பும், அரசின் பங்காளிக்கட்சிகளும் சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தன . எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும் அதன் பங்காளிக்கட்சிகளும் ,தமிழ் தேசிய கூட்டமைப்பு .ஜேவி.பி. .கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரான றிசாத் பதியுதீன் ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர்.

இதேவேளை ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வாக்கையெடுப்பில் பங்கேற்காத அதேவேளை எதிர்க்கட்சிப்பக்கத்தில் உள்ள முஸ்லிம் கூட்டமைப்பு எம்.பி.யான அலிசப்ரி ரகம் மற்றும் சுயாதீன எம்.பி.யான அத்துரலிய இரத்தின தேரர் ஆகியோர் சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தது போலவே எதிர்க் கட்சியை சேர்ந்த அரவிந்தகுமார் , இஷாக் ரஹ் மான்,டயானா கமகே ஆகியோரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதன் பின்னர் சட்டமூலத்திலுள்ள சில சரத்துக்களை நிறை வேற்ற எதிர்க்கட்சியினர் வாக்கெடுப்புக்களைக் கோரியதுடன் பல சரத்துக்களுக்கு திருத்தங்களையும் முன்வைத் தனர். இந்த திருத்தங்களி பெருமளவானவை அரசினால் நிராகரிக்கப்பட்டு குறித்த சரத்துக்கள் திருத்தமின்றி நிறைவேற்றப்பட்டன.

இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 149 வாக்குகளும் எதிராக 58 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

## அரசின் தடைகளை மீறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிவாய்க்கால் பொது நினைவிடத்தில் நினைவேந்தல் செய்வதற்கு முல்லைத்தீவு நீதிமன்றம் தடைவிதித்திருந்தது. பின்னர் அந்தத் தடைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணிகள் காண்டீபன், சுகாஸ் மற்றும் அன்ரன் புனிதநாயகம் மற்றும் சிலரின் வாதத்திறமையால் சுகாதார நிலைமைகளை கடைப்பிடித்து நினைவேந்தல் செய்யலாம் என தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அன்று இரவே முல்லைத்தீவில் கொரோனா அதிகரிக்கின்றது என காரணம் காட்டி புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு மற்றும் முள்ளியவளை பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்கள் முற்றாக தனிமைப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் பிரதேசமும் இதற்குள் உள்ளடங்குவதால் அவ்விடத்தில் நினைவேந்தல் செய்ய முடியாத சூழ்நிலையிலும், கொரோனா தொற்று தமிழர் தாயகத்தில் தீவிரமடைந்து செல்லும் நிலையிலும் வீட்டில் இருந்து நினைவேந்துமாறு ஏற்பாட்டுக்குழு கோரிக்கை விடுத்திருந்தது.

அதனையடுத்து மக்கள் வீட்டிலிருந்தும், ஆலயங்களிலும் இனப்படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளை நினைவுகூர்ந்தனர்.

நினைவேந்தல் நடைபெற்றால் அதைத் தடுக்கும் நோக்குடன் யாழ் பல்கலைக்கழகம், நல்லூர் ரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் நினைவிடம் மற்றும் சில பொது இடங்களில் பெருமளவில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தனர். அரசின் இத்தடைகளையும் மீறி யாழ் பல்கலைக்கழகத்தில் இனப்படுகொலை நினைவேந்தல் நடைபெற்றது. பல்கலைக்கழக காவலாளி ஒருவர் கொளுத்தப்பட்டிருந்த தீபத்தை தனது காலால் உதைந்து விழுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள் பல சூம் செயலி ஊடாக நினைவேந்தலை ஒரு கூட்டு நினைவேந்தலாக ஒழுங்குபடுத்தி நடாத்தியிருந்தார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்திய சூம் நினைவேந்தலில் 200க்கும் அதிகமான மக்கள் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் இருந்து கலந்துகொண்டனர்.